செ.வெ. எண் : 86 நாள் : 27.7.2011

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 27.7.2011

சென்னை மாநகரக் காவல் நுண்ணறிவுப் பிரிவில் காவல் ஆய்வாளராக பணி புரிந்து வந்த திரு J. அமலதாஸ் அவர்கள், உடல்நலக் குறைவு காரணமாக 24.7.2011 அன்று காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிக்க துயருற்றேன்.

காவல் ஆய்வாளர் திரு J. அமலதாஸ் அவர்களின் மறைவினால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது மனைவிக்கும், குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல் நலக் குறைவு காரணமாக காலமான காவல் ஆய்வாளர் திரு J. அமலதாஸ் அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்